**தலைப்பு 275 - பொலநறுவை மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலனறுவை மாவட்டச் செயலகத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான பொலனறுவை மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதியன்று கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2019 டிசம்பர் 03 ஆந் திகதிய 271.∴2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாயரித்த அந்த நிதிக்கூற்றுக்களில் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொலநறுவை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவான ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கும் இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிதிக்கூற்றுக்களை மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து அதனைப் பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அதன் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவது என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றதென வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் வசதியானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கிள்ளன என்பதும்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டபூர்வத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(இ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்து வருகின்றன.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது முன்னைய ஆண்டுப் பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 7(iv) பந்தியின் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகப் புத்தகங்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவு ரூபா 31,372,282 ஆகும். நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 34,443,383 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 3,071,101 வித்தியாசம் ஏற்பட்டது. | மாவட்டச் செயலகப் புத்தக மீதிகளுக்கும் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கும் இடையே கணக்கிணக்கம் செய்ய வேண்டும். | வித்தியாசம் இல்லை எனக் கூறப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்டச் செயலகப் புத்தகங்களின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளது கூட்டுத்தொகை ரூபா 232,991,036 ஆகும். நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 233,342,838 ஆகியமையால் ரூபா 351,802 வித்தியாசம் நிலவியது. | மேலே உள்ளவாறு | கூட்டும் போது தவறு ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் மூன்று செலவின விடயங்கள் தொடர்பான மற்றும் திறைசேரி அச்சிடற் குறிப்பு என்பவற்றுக்கிடையே ரூபா 15,881,645 வித்தியாசம் நிலவியது. | திறைசேரியின் அச்சிடற் குறிப்பு மற்றும் மாவட்டச் செயலகத்தின் அறிக்கை என்பன கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். | திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவினப் பேரேட்டின்படி 03 மூலதனச் செலவின விடயங்களுக்கான செலவினம் ரூபா 449,232,312 ஆகும். நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அச் செலவின விடயத்தில் நிலையான சொத்துக்களது கொள்வனவுப் பெறுமதி ரூபா 448,624,036 ஆகும். இதனால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 608,276 ஆகும். அவ்வித்தியாசத்திற்கான காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்கள் சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | வித்தியாசம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காணிக்கான பெறுமதியில் நடைபெறும் வேலையின் கீழ் நகர்ப்புறக் கலவை என்பதன் கீழ் ரூபா 110,276,600 பெறுமதியை உறுதி செய்வதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுமதியை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் பெறப்படவில்லை. |

### 1.6.4 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணாததுடன், சில பதிவேடுகள் முறையாகவும், நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிராமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 891(1) க்கமைய பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பதிவேடொன்று மாவட்டச் செயலகத்தால் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) குறிப்பிடும் தகவல்கள் உள்ளடங்குமாறு பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | பதிவேட்டைப் பேணுமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மின் உபகரணப் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 454(2) க்கமைய மெதிரிகிரிய, எலஹர, திம்புலாகல, ஹிங்குராங்கொட பிரதேச செயலகங்கள் மின் உபகரணப் பதிவேடுகளைப் பேணவில்லை. | நிதிப் பிரமாணம் 454(2) குறிப்பிடுமாறு அரச கட்டிடங்களது சகல மின் துணைப்பாகங்களும் உபகரணங்களும் தொடர்பாக பொருட் பதிவேடு பேணப்பட வேண்டும். | மேலே உள்ளவாறு |
| (இ) | இழப்பு தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 110 க்கமைய இழப்பு தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு பேணப்பட வேண்டுமாயினும் மாவட்டச் செயலகம் இழப்பு தொடர்பான பதிவேட்டைப் நாளதுவரையாக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 110 க்கமைய அதில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கமைய நாளதுவரை யாக்கப்பட்ட இழப்பு தொடர்பாக பதிவேடு பேணப்பட வேண்டும். | மேலே உள்ளவாறு |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 1677 க்கமைய பேணப்பட வேண்டிய வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு மாவட்டச் செயலகத்தால் பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) க்கமைய வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு ஒன்றைப் பேண வேண்டும். | மேலே உள்ளவாறு |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் அதனைப் பேணுவதைச் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வினை மேற்கொண்டு முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றல்களைச் செய்ய வேண்டுமெனவும் அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றைக்கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருந்த வேண்டியபோதும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் பெறப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தேவைக்கேற்றவாறு குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், அறிக்கையின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் வழங்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலே உள்ளவாறு |
| (இ) | உள்ளகக் கணக்காய்வுப் பணியை முறைப்படி நிறைவேற்றுவதற்கு ஆக்கபூர்வமான விதி முறைகள் உள்ளதைக் கணக்கீட்டு உத்தியொகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், அறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் அவதானிப்புக்களுக்கமைய அத்தேவை நிறைவேறவில்லை. | 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலே உள்ளவாறு |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணம் 1647 | மாவட்டச் செயலகம் மற்றும் மெதிரிகிரிய, திம்புலாகல பிரதேச செயலகங்கள் வாகனங்களின் சகல துணைப்பாகங்களையும் உள்ளடக்கிய விரிவான பொருட் பட்டோலையைப் பேணவில்லை. | நிதிப்பிரமாணம் 1647 க்கமைய சகல துணைப் பாகங்களும் உள்ளடங்கிய விரிவான பொருட் பட்டோலையைப் பேண வேண்டும். | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் செயலாளரது 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 2/.2017 | அரசிற்குச்சொந்தமான சகல மோட்டார் வாகனங்களும் குறித்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும் என ஏற்பாடகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், திம்புலாகல, வெலிகந்த, மெதிரிகிரிய, ஹிங்குராக்கொடை, லங்காபுர, எலஹெர பிரதேச செயலகங்களின் 34 விடயங்களது உரித்தையும் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் உரித்தை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலே உள்ளவாறு |
| (இ) | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 1/2018 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை கூறப்பட்டபோதும், மாவட்டச் செயலகத்திற்குரிய பயன்படுத்த முடியாது அகற்றப்பட்ட 08 மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திட்டமிடப்பட்ட மற்றும் வேண்டுகோள் விடுத்த கட்டு நிதிகளுக்கிடையே ரூபா 16,211,222,000 வித்தியாசமிருந்தது. வேண்டுகோள் விடுத்த மற்றும் பெறப்பட்ட கட்டுநிதிகளுக்கிடையே ரூபா 7,806,954,000 வித்தியாசமும் திட்டமிடப்பட்ட மற்றும் பெறப்பட்ட கட்டு நிதிகளுக்கிடையே ரூபா 7,951,616,000 வித்தியாசமுமிருந்தது. | கட்டுநிதி முறைப்படி திட்டமிடப்பட வேண்டும். | போதியளவு கட்டுநிதி திறைசேரியால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்குரிய உத்தியோகபூர்வ மனையில் குடியிருக்கும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து வீட்டை வாடகை நிலுவையாகிய ரூபா 153,600 அறவிடப்படவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து குத்தகையாளர்களிடமிருந்து காணி வரி வருமான நிலுவை ரூபா 802,504 அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக மெதிரிகிரிய பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை. | வருமான வரி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2007 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியின்போது உத்தியோகபூர்வ மனையைப் பயன்படுத்திய ஹிங்குராக்கொடை பிரதேச செயலகத்தின் முன்னாள் கணக்காளர் ஒருவரிடமிருந்து ரூபா 21,050 அறவிடப்படாதிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரித நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | தமன்கடுவ பிரதேச செயலகத்தில் 25 குத்தகையாளர்கள் குத்தகை செலுத்தாமையால் குத்தகை நிலுவையாகவும் வட்டியாகவும் ரூபா 226,940 அறவிடப்பட வேண்டியிருந்தது. | மேலே உள்ளவாறு | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (உ) ஹிங்குராக்கொடை பிரதேச செயலகத்தில் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 26 நெடுங்காலக் குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் குத்ததை ரூபா 475,069 ஆகும். | முறைப்படி குத்தகை அறவிடப்பட வேண்டுவதுடன் குத்தகை செலுத்தாத குத்தகையாளர்கள் சம்பந்தமாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குத்தகை அறவிடுவதற்கு உத்தியொகத்தர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் உடன்படிக்கைக் காலத்தை மீறி 31 ஆண்டுகள் அரச மனை ஒன்றில் குடியிருந்தமை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தண்டப்பண நிலுவை ரூபா 209,387 ஆகும். இதனை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய வீட்டை மீண்டும் மாவட்டச் செயலகம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், தண்டப் பண நிலுவையும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வீட்டைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் 06 செலவின விடயங்களுக்குப் பெற்ற தொகையில் 16 முதல் 67 சதவீதம் செலவிடப்படாது எஞ்சியிருந்தது. | முறைப்படி செலவினத்தை மதிப்பீடு செய்து செலவினத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டும். | செலவுகளைக் கட்டுப்படுத்தி சிக்கனமாகச் செலவு செய்தமை காரணமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.4 ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிற அமைச்சுக்களும் திணைக்களங்களும் 23 தலைப்புக்களுடன் தொடர்புடைய 59 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்த நிதி ரூபா 1.485,444,862 ஆகும். இது 10 முதல் 100 சதவீதம் வரையான ரூபா 443,703,581 எஞ்சியிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகுறித்த பணிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | பதில் கிடைக்கப்பெறவில்லை |
| (ஆ) | பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களது 06 தலைப்புக்களுக்குரிய 09 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியிலும் கூடுதலாக ரூபா 605,583 செலவிடப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்குள் செலவு மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல பிரதேச செயலகத்தில் மத்திய அரசாங்க முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 45,075 கடன் மீதி நிலவியது. | கடன்பட்டவரிடமிருந்து அல்லது பிணையாளரிட மிருந்து அறவிடப்பட முடியாதெனின் புத்தகங்களிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) திம்புலாகல மற்றும் எலஹெர பிரதேச செயலகங்களில் பணியாற்றிய போது வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 554,463 கூட்டுத்தொகை உடைய ஊழியர் கடன் மீதி அறவிடப்படாதிருந்தது. | துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப்பெறவில்லை |
| (இ) திம்புலாகல பிரதேச செயலகத்தில் மாகாண சபை முற்பணக் கணக்கின் கீழ் மத்திய அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்கங்களுக்கும் இடமாற்றம் பெற்ற 03 உத்தியோகத்தர்களுடன் ரூபா 155,126 கடன் மீதியை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன் மீதியைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

## 2.6 முற்பணத்தை வழங்குதலும் தீர்வு செய்வதும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2015 யூலை 15 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டவாறான 371(5) ஆம் நிதிப்பிரமாணத்தின் படி இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த பணியை நிறைவேற்றி 10 நாட்களுக்குள் அந்த இடைக்காலக் கட்டுநிதி தீர்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டின்போது வெலிக்கந்தைப் பிரதேச செயலகம் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 297,900 கூட்டுத்தொகையுடைய இடைக்காலக் கட்டுநிதியை 04 முதல் 165 நாட்கள் வரை தாமதித்துத் தீர்வு செய்திருந்தது. மேலும், மாவட்டச் செயலகம் 15 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 279,585 கூட்டுத்தொகையுடைய இடைக்காலக் கட்டுநிதி 16 முதல் 200 நாட்களின் | இடைக்காலக் கட்டுநிதியானது குறித்த வேலை முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும். | உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

பின்னரும் திம்புலாகல பிரதேச செயலகம் 13 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 465,000 இடைக்காலக் கட்டுநிதியும் 50 முதல் 290 நாட்கள் தாமதித்துத் தீர்வு செய்யப்பட்டிருந்தன.

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 571(1) க்கமைய ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலங்கடந்த வைப்புகளது நிரல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், வெலிகந்தை பிரதேச செயலகத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. | காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக அரையாண்டு இறுதியிலும் நிரல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டு ள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திம்புலாகல பிரதேச செயலகத்தில் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளாகக் கடந்த ரூபா 87,495 பெறுமதியான 13 வைப்புக்கள் சம்பந்தமாக 571(3) ஆம் நிதிப்பிரமாணத்தின் படி பரிசீலிக்கப்பட்டு அரச வருவாயிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலங்கடந்த வைப்புக்களை அரச வருவாயிலிட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் பிற அமைச்சுக்களிடமிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கென பெறப்பட்ட தொகையில் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டம் நடைபெறாமை காரணமாக ரூபா 1,201,000 றெுமதியான 07 வைப்புக்கள் வெலிகந்தை பிரதேச செயலகத்தில் பயன்படுத்தப்படாதிருந்தது. | குறித்த பணிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | ஒரு வைப்பைத் தவிர 07 வைப்புக்களுக்குரிய செயற்திட்டங்கள் அமுலாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.8 கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தில் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத ரூபா 1,601,143 கட்டுநிதி மீதி இருந்தது. | மீளாய்வாண்டு இறுதியில் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்தால் மீள் நிரப்பப்பட வேண்டிய தொகை இணக்கம் பெறாததால் இவ்வேறுபாடு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.9 வங்கிக் கணக்கைச் செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெலிகந்தை மற்றும் திம்புலாகல பிரதேச செயலாளரின் 2020 சனவரி மாத வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த வழங்கப்பட்டு கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகளில் உள்ளடங்கிய முறையே ரூபா 28,085 காசோலையும் ரூபா 1,088,144 பெறுமதியான 10 காசோலைகளும் கணக்காய்வுத் தினமான 2020 பெப்ரவரி 10 ஆந் திகதியளவிலும் சேவைநாடுநர்களுக்குக் கையளிக்கப்படாது விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்தது. | தாமதமின்றி கொடுப்பனவுகளை சேவை நாடுநர்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயன்றளவு விரைவில் காசோலைகளை சேவைநாடுநர்களிடம் வழங்குவதற்கு வெலிகந்தை பிரதேச செயலகத்திற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திம்புலாகல பிரதேச செயலகத்திலிருந்து பதில் கிடைக்கப் பெறவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகம் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ஆ) | 2018 மார்ச் 31 ஆந் திகதிய 2/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான 2018 சனவரி 29 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கைப் பிரகாரம் பிரதேச செயலகமொன்றின் 05 பிரதான சேவைகளுக்கான வருடாந்த இலக்கு தீர்மானிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வெலிகந்தை பிரதேச செயலகம் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெலிகந்தை பிரதேச செயலகம் இது தொடர்பாகத் துரித நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 எதிர்பார்த்த நிறைவேற்று மட்டம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தமனக்கடுவ பிரதேச செயலகப் பிரிவின் நெல்சன்புர நில பியச வீதியை கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு அளவைக்கான உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தப்படாது முறையான நியமம் இன்றி கொங்கிறீட் கலவை இடப்பட்டிருந்தது. மேலும், மதிப்பீட்டின் பிரகாரம் பாதையின் இரு பக்கங்களிலும் நீர்வழிந்தோடுவதற்கு | மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த நியமத்தின் படி செயற்திட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அளவைக்கான உபகரணங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

6 அங்குலத்திற்குப் பதிலாக --- கழிவு நீர்ப் பாதையை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பொலித்தீன் விரிக்கப்படாது கொங்கிறீட் இடப்பட்டிருந்தது.

### 3.3 எதிர்பார்த்த விளைவை (Outcome) அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திம்புலாகல பிரதேச செயலகம் சுகித புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் ரூபா 972,328 கணனி ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணித்திருந்த போதும், மேலும், அபிவிருத்தி செய்யப்பட்ட வேண்டியமையால் கட்டிடம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

### 3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது திம்புலாகல பிரதேச செயலகம் ரூபா 8,306,695 நிதியேற்பாட்டில் அமுலாக்க எண்ணியிருந்த 07 செயற்திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை. | நிதியானது வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | எலஹெர பிரதேச செயலகம் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிவத்துள்ளதுடன், லங்காபுர பிரதேச செயலகம் பதில் வழங்கவுமில்லை. |

### 3.5 பணம் விடுவிக்கப்பட்டபோதும் முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) எலஹெர பிரதேச செயலகத்தில் 04 கிராம சக்தி சங்கங்களால் சீவனோபாய | நிதியானது வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட | எலஹெர பிரதேச செயலகம் கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்திக்கு வழங்கிய ரூபா 994,825 லங்காபுர பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு சங்கத்திற்கு உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கு வழங்கிய ரூபா 200,000 சீவனோபாய அபிவிருத்திக்காக 02 சங்கங்களுக்கு வழங்கிய ரூபா 550,000 என்பன பயன்படுத்தப்படாதிருந்தன. | வேண்டும். | அவதானிப்புடன் இணங்குவதாக அறிவித்துள்ளது. லங்காபுர பிரதேச செயலகத்திலிருந்து பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ஆ) | வெலிகந்த பிரதேச செயலகம் உருவாக்கிய 06 கிராம சக்தி சங்கங்களில் 02 சங்கங்கள் மாத்திரம் கடன் வழங்கக் கூடியவாறு விஸ்கோ கடன் சங்கங்களை நிறுவி இருந்தது. ஒரு சங்கம் மாத்திரமே கடன் வழங்கியிருந்தது. கடன் வழங்குவதற்காக இச்சங்கங்களுக்கு ரூபா 4,663,350 வழங்கப்பட்டிருந்தபோதும், வழங்கப்பட்ட ரூபா 310,000 கடன் மாத்திரமே. | நிதியானது வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | சங்க நடவடிக்கைகளை சீராக்குவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | திம்புலாகல பிரதேச செயலகம் கிராம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் வழங்கிய தொகையில் சீவனோபாய அபிவிருத்தி மற்றும் ஆற்றல் அபிவிருத்திக்கென பயன்படுத்திய தொகை முறையே 32 சதவீதம் மற்றும் 17 சதவீதம் என்பனவாகும். அவ்வாறிருக்க, இரண்டாவது தவணைப் பணமும் வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் வெற்றியைக் கருத்திற் கொண்டிராதையடுத்து நிதியேற்பாடு செய்யப்படவும் வேண்டும். | இந்த ஆண்டில் மேலும், செயலாற்றும் மட்டத்திற்குக் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | தமன்கடுவ பிரதேச செயலகத்தால் கிராத சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 சங்கங்களுக்கு சீவனோபாய அபிவிருதிக்கு வழங்கிய தொகையில் எதுவுமே வழங்கப்படவில்லை. ஆற்றல் அபிவிருதிக்காக வழங்கப்பட்ட தொகையில் ஒரு சங்கம் எத்தொகையையேனும் | நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். | செயற்திட்ட நோக்க ஈடேற்றத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

செலவிடத் தவறியிருந்தது. வேறு 2 சங்கங்கள் 8 சதவீதம், 11 சதவீதம் என குறைந்த மட்டத்தில் செலவுகளை மேற்கொண்டிருந்தன.

## 3.6 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிச் செயலாளரின் 2012 சனவரி 25 ஆந் திகதிய 01.∴2012 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்திக்கு முரணாக கிராம உத்தியோகத்தர் பிரிவு எல்லைக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு எல்லைக்கு அப்பால் நடைபெற்றவாறிருக்கும் சமுதாய அடிப்படையிலான நிறுவனத்திற்கு லங்காபுர பிரதேச செயலகம் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைப் பிரகாரம் அதிகாரத்துக்கு உட்பட்ட தொண்டர் நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும். | சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கு மூன்று ஒப்பந்தங்களுக்கு அதிகமாக வழங்கப்படாலாகாது என்பதால் அதற்கு அண்மித்த பிரிவில் இருந்த சமுதாய அடிப்படையிலான நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திம்புலாகல பிரதேச செயலகம் வழங்கிய அநுத் ஓயா பிரிவில் புத்தக விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல், திவுல்தமன இராப்பகல் வொலிபோல் விளையாட்டு மைதானத்தைத் தயாரித்தல் போன்ற செயற்திட்டங்களாக குறிப்பிட்ட சங்கம் உப ஒப்பந்தத்திற்கு வழங்கியிருந்தது. | தொண்டர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தங்களில் ஈடுபடுத்தப்படின் அந்நிறுவனங்கள் திறனற்றவையாக நிரலிடப்பட வேண்டும். | எழுத்துமூல விசாரணை மேற்கொண்டு திறனற்ற நிரலில் இடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் பொருட்டு மெதிரிகிரிய, வெலிகந்த, லங்காபுர பிரதேச செயலகங்களால் பொருட் கொள்வனவுக் கைநூலின் 4.2.1 மாதிரிக்கமைய பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | பொருட் கொள்வனவு கைநூலின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்குமாறு பிரதேச செயலகத்தை கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொருட் கொள்வனவுக் கைநூலின் 3.9.1 மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் 2012 சனவரி 05 ஆந் திகதிய 01.⁚.2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி என்பவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்தாது தமன்கடுவ பிரதெச செயலகம் ரூபா 90.33 மில்லியன் பெறுமதியான மதிப்பீட்டில் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 108 செயற்திட்டங்களை சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கு வழங்கியிருந்தது. | பொருட் கொள்வனவுக் கைநூல் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கை ஆலோசனைக்கு அமைய தொண்டர் அமைப்புக்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | முதலாவது கட்டம் 2017 நவம்பர் 25 க்கு முன்னர் முடிவடைதல், 2018 இக்கு முன்னர் செயற்திட்டம் முற்றாக முடிவடைதல் எனும் தேவை மற்றும் முன்னோடி வேலைக்கான செலவினத்தை கழித்துக் கொள்ளப்படுதல் எனும் காரணங்களைக் காட்டி எண்ணிய மாவட்டச் செயலக அலுவலகக் கட்டிடத்தின் முதலாவது கட்டத்தை நிறைவேற்றிய நிறுவனத்துக்கே இதன் இரண்டாவது கட்டத்தை நிறைவேற்றுவதற்கும் வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், இச்செயற்திட்டத்தின் முதலாவது, இரண்டாவது கட்டங்கள் 2020 மே 31 ஆந் திகதியளவிலும் உள்ளவாறு றிறைவேறாதிருந்தது. | வெளிப்படையான போட்டியுடன் அமைந்த கூறுவிலைகளின் கீழ் கூறு விலையாளர் ஒருவருக்கு செயற்திட்டத்தை வழங்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (i) | | | |
| (ii) | மாவட்டச் செயலகக் கட்டிடம் முன்னோடி வேலைகளுக்கான (Preliminaries) செலவினமானது முதலாவது கட்டிடத்துடன் ஒப்பிட்டவாறு ரூபா 38,471,918 அதிகரிப்புக்குள்ளாகி இருந்தது. ஏற்றுக்கொண்ட கூறுவிலை (Negotiated Rate) முதலாவது | ஏற்றுக்கொண்ட கூறுவிலைப் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். | முதலாவது கட்டத்திற்கும் இரண்டாவது கட்டத்திற்குமிடையே ஓராண்டிற்கு மேற்பட்ட வித்தியாசம் நிலவியமை இதற்கு ஏதுவாயிற்று என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டக் கூறுவிலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், கொடுப்பனவு செய்யப்படுகையில் அக்கூறுவிலையை பயன்படுத்தப்படவில்லை. இவ்வாறு முதலாவது கட்ட கூறுவிலையைப் பயன்படுத்தாது இரண்டாவது கட்டத்திற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதால் ரூபா 186,756,603 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | உடன்படிக்கைப் பிரகாரம் மாவட்டச் செயலகக் கட்டிட நிர்மாண வேலையின் முதலாவது கட்டம் 2017 நவம்பர் 25 க்கு முன்னர் முடிவடைய வேண்டுமாயினும், 2019 டிசம்பர் 16 வரை முடிவடையாதிருந்தது. இத்தாமதம் காரணமாக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா 11,250,000 அறவிடப்படவில்லை. | முறைப்படி தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 பெப்ரவரி 29 வரை கால நீடிப்புக்கான பரிந்துரை பொறியிலாளரால் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | மாவட்டச் செயலக கட்டிட நிர்மாண வேலைச் செயற்திட்டத்தின் உடன்படிக்கைப் பிரகாரம் சான்றுப்படுத்திய அதிகுறைந்த இடைக்காலக் கொடுப்பனவு (ஐவெநசஅைெ ீயலஅநவெ) ரூபா 25 மில்லியனெனினும், ரூபா 25 க்குக் குறைந்த கட்டணப் பட்டியலில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | உடன்படிக்கைப் பிரகாரம் கட்டணப் பட்டியலில் கைச்சாத்திட வேண்டும். | ஒப்பந்த நிறுவனத்தின் பணத் தேவைக்கேற்ப கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி வங்கியைப் பேணுவதற்கு மஹாவலி அதிகார சபை வழங்கிய காணியில் உள்ள 2 அரச மனைகளில் உள்ள 2 நபர்கள் அத்துமீறிக் குடியிருப்பதுடன், மனைகளைத் திருப்பி ஒப்படைக்குமாறு கோரியபோதும், அவற்றை திருப்பி ஒப்படைக்காதுமிருந்தனர். அவர்கள் குடியிருந்த காலத்துக்கான வாடகையும் அறவிடப்படவில்லை. | அத்துமீறிக் குடியிருப்போரை அச்சுறுத்துவதற்கும் முறைப்படி வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ஆ) | எலஹெர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான நிலசெவன அலுவலகம் அமைந்துள்ள 24 காணிகளது உரித்தை மஹாவலி அதிகார சபையிடமிருந்து பிரதேச செயலகம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணிகளின் உரித்தைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வீடமைப்பு அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டு ஹிங்குராங்கொடை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ மனை ஒன்று தற்போது பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 118,048 மற்றும் மாதாந்த மதிப்பீட்டுத் தவணைப் பணமாகிய ரூபா 35,193 என்பன கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. | மனையைப் பழுதுபார்த்துப் பயன்படுத்தவும் நிலுவையைத் தீர்வு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொடுப்பனவு செய்வதற்கு நிதிஏற்பாடு பெறப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெலிகந்தை பிரதேச செயலகத்தில் மாவட்டச் செயலாளரின் பெயரில் உள்ள ஒரு லொறி பவுசரினதும் ஒரு டிறக்டர் பவுசர்களினதும் பெறுமதியை இனங்கண்டு அவற்றை சொத்துக்களாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | சொத்துக்களின் பெறுமதியை கணக்கிலிடப்பட வேண்டும். | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.8 நட்டங்களும் இழப்புக்களும்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------- | ------------------------------ | ---------------------------- |
| (அ) | 2010 யூன் 25 ஆந் திகதியன்று 59-8974 இலக்கமுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்துச் சம்பந்தமாக நி.பி 104(4) க்கமைய இறுதி விசாரணை அறிக்கையில் விபத்துக்கான ரூபா 230,000 இழப்பை முன்னாள் திம்புலாகல பிரதேச செயலாளர் ஒருவரிடமிருந்து பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதும், அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ஆ) | மாவட்டச் செயலகத்தால் நலன் பெறுநர்களுக்கு வழங்கப்படுவதற்கென கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 160,902 பெறுமதியான 84 கூரைத் தகடுகள் பழுதடைந்த போதும், வழங்குநரிடமிருந்து அந்த இழப்பு அறவிடப்படவில்லை. | இழப்பை அறவிட வேண்டும். | பழுதற்ற தகடுகளை வழங்குவதற்கு அந்த நிறுவனம் இணங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட தகவல்களில் உள்ள முரண்பாடு காணப்பட்டமையாலும் காப்புறுதி உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இழப்புக்கான பெறுமதியை | நிதிப்பிரமாணத்தின் படி இழப்பை அறவிட வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காப்புறுதி நிறுவனம் நிராகரித்ததால், 2018 யூன் 05 ஆந் திகதிய NCLM-9315 ஆம் இலக்க லொறி விபத்தினால் ஏற்பட்ட ரூபா 1,007,750 இழப்பை அறவிட முடியவில்லை. | | |
| (ஈ) | 2018 ஒக்டோபர் 23 ஆந் திகதி PA-4979 இலக்க கெப் வண்டி வித்துக்குள்ளாகியமையால் ஏற்பட்ட இழப்பு ரூபா 241,700 என ஆரம்ப விசாரணைகளின்போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. காப்புறுதி நிறுவனம் வழங்கிய தொகை ரூபா 165,450 ஆகும். நிதிப்பிரமாணம் 104(4) ஏற்பாடுகளுக்கமைய பூரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 76,250 இழப்பு அறவிடப்படவில்லை. | இழப்பு தொடர்பான பூரண விசாரணை நடாத்தப்பட வேண்டும். | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மாவட்டச் செயலகத்திற்குரிய PA-4979 இலக்க கெப் வண்டி 2017 யூன் 13 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்ட இழப்பு ரூபா 427,930 எனத் தெரிய வந்தது. அதன்பொருட்டு காப்புறுதியால் மீள்நிரப்பப்படாத அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 63,923 இழப்பு அறவிடப்படவில்லை. | இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் | இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.9 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் கிடைக்கப் பெறவில்லை. | குறித்த காலத்தினுள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் வெளியிடப்பட் 96/05 ஆம் இலக்க மற்றும் 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 6(11) பந்தியின் பிரகாரம் வரியிறுப்பாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமாயினும், சகல வரியிறுப்பாளர்களுக்கும் அவ்வாறு அறிவித்தலை வழங்குவதற்கு எலஹெர பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த தினத்தில் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | எலஹெர பிரதேச செயலகப் பிரிவில் 10 பிரஜா பூமி உரித்துக்கள் வழங்கப்படாதிருந்தன. 12 அரச நிறுவனங்களுக்கு ஒப்படைப்புச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. | பிரஜா பூமி உரித்துறுதிகளும் ஒப்படைப்பு வழங்கப்படாத காணிகளில் கவனம் செலுத்தி அச்சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த உரித்துறுதிகளையும் ஒப்படைப்புக்களையும் மேற்கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பமாகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | திம்புலாகல பிரதேச செயலகத்தில் 20-700001 எனும் இலக்கத்தில் விதவைகள், அநாதைகள், ஓய்வூதியம் பெற்ற ஒருவர் 2014 நவம்பர் 04 ஆந் திகதி இறந்து விட்டதாக பிரதேச செயலாளருக்குத் அறிவிக்காததால் அந்நாள் முதலாக 2016 ஒக்டோபர் வரை ரூபா 420,776 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீண்டும் அறவிடப்படவில்லை. | ஓய்வூதியாளர் இறக்குமிடத்து அதனை அறிவிக்காது விடல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவறான முறையில் பெறப்பட்ட இத்தொகை துரிதமாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரண்டு ஓய்வூதியக்காரர் களுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட ரூபா 717,828 கணக்காய்வுத் தினமான 2020 பெப்ரவரி 20 ஆந் திகதியளவிலும் திம்புலாகல பிரதேச செயலகத்தால் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | கூடுதலாக வழங்கப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (உ) | திம்புலாகல பிரதேச செயலகத்தின் மோட்டார் வாகன பிரிவின் 2019 ஆம் ஆண்டின் சனவரி மாதம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,501,253 தொகை 03 நாட்களிற்கும் 19 நாட்களிற்கும் இடைப்பட்ட காலதாமதத்துடன் வங்கியில் இடப்பட்டிருந்தது. | அன்றோ அல்லது தாமதமின்றி வங்கியிலிடப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ஊ) | மீளாய்வாண்டில் சிறுநீரகப் படி மற்றும் வயது முதிர்ந்தோருக்கான படி எனக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையில் குறித்த நலன்பெறுநர்கள் பெறாதுவிட்ட ரூபா 3,616,100 அஞ்சல் அலுவலகத்தால் திம்புலாகல பிரதேச செயலகத்திற்கு 02 முதல் 05 மாத கால தாமதத்தின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. இத்தொகையானது எதிர்பார்ப்புப் பதிவேட்டில் உள்ள நபர்களுக்கு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்யப்படாத படியைத் துரிதமாக அலுவலகம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவில் பிபிதெமு பொலனறுவை மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்திட்டம் என்பவற்றின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 13 பண்ணைகள் பொருத்தமான | பொருத்தமான நிறுவனத்திடம் வழங்கப்பட்டு பராமரிப்பும் பயன்பாடும் முறையாக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படாமையால் அவற்றைப் பழுதுபார்த்தல் மற்றும் பயன்படுத்துதல் சம்பந்தமான பொறுப்பு எவரிடமும் ஒப்படைக்கப்படவில்லை. | | |
| (ஏ) | மீளாய்வாண்டில் வயது முதிர்ந்தோருக்கான படி, என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு எலஹெர பிரதேச செயலகம் பெற்ற நிதி ரூபா 58.129,000 ஆகும். இதில் படியாக வழங்கப்படாத ரூபா 1,460,700 திருப்பி அனுப்பப்படவில்லை. | பணத்தைப் பெறாமைக்கான காரணத்தை இனம் கண்டு நிதி தேவைப்படாத நலன்பெறுநர்கள் இருப்பின் அவர்களை அகற்றி எதிர்பார்ப்புப் பதிவேட்டில் உள்ளவர்களுக்கு நலன்களை வழங்க வேண்டும். | குறைந்த பட்சம் 03 மாதங்கள் தொடர்ச்சியாக படியைப் பெறாதுள்ள நபர்களுக்குப் பதிலாக எதிர்பார்ப்புப் பதிவேட்டில் உள்ள நபர்களை உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | 2015 ஆம் ஆண்டில் 549 காணிக் குழுவினரின் பொருட்டு நடாத்தப்பட்ட காணிக் கச்சேரி எலஹெர பிரதேச செயலகத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. குழுவினர் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட காணிக் கச்சேரிக்குப் பதிலாக மீண்டும் காணிக் கச்சேரி நடாத்தப்பட வேண்டும். | காணி ஆணையாளருக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | மாகாண சபை காணிகளது உரித்துடையதாக இருக்கும் பிரிவுகளில் எலஹெர பிரதேச செயலகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ள வரிக் கோவைகளின் எண்ணிக்கை 230 ஆகும். எவ்வாறாயினும், அவற்றுள் வரி அறவிடப்படுவது 43 எண்ணிக்கையிலான வற்றிற்கே மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. | சகல வரிக் கோவைகளும் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரி நிலைவையை அறவிடுவது ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ழ) | எலஹெர பிரதேச செயலகத்தின் வரிப் பேரேட்டின் படி 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 24 வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியவ ரி நிலுவையும் வட்டியும் ரூபா 6,225,745 ஆகும். | நிலுவையைத் துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஔ) | எலஹெர பிரதேச செயலகத்தில் வழங்கற் பத்திரத்தின் மூலம் அளிக்கப்பட்ட காணி ஒன்று வழங்கற் பத்திர நோக்கத்திற்கப்பால் இரு கோ்புரங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வழங்கற் பத்திரத்துடனான காணி குறித்த நிபந்தனைகளின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டும். | முறையாக அகற்றப்படவில்லை என்றும் காணி உரித்தாளர் படிப் பத்திரம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (க) | 2018, 2019 ஆம் ஆண்டுகளில் மெதிரிகிரிய பிரதேச செயலகம் நில அளவைத் திணைக்களத்திற்கு அனுப்பிய 455 அளவைகளுக்கான கட்டளைகளில் 274 கட்டளைகளும் 2020 சனவரி 27 ஆந் திகதியன்றும் பதில் கிடைக்கப் பெறாதிருந்தது. | அளவைகளுக்கான கட்டளைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ங) | 2019 ஆம் ஆண்டின்போது ஹிங்குராங்கொட பிரதேச செயலகம் அளவைகள் அத்தியட்சகருக்கு அனுப்பிய 380 அளவைகளுக்கான விண்ணப்பங்களில் 254 க்கு அளவை மேற்கொள்ளப்படாதிருந்தது. அது 66 சதவீதத்திற்கு மேற்பட்டதாகும். | மேலே உள்ளவாறு | பெறப்படாத அளவைகளை இனங்காணும் பொருட்டு ஒன்றைப் பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ச) | தமன்கடுவை பிரதேச செயலகத்தில் 29 பிரஜாபூமி உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. | பிரஜாபூமி உரித்துறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஞ) | தமன்கடுவை பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான 190 அரச நிறுவனங்களுக்கு காணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | அரச நிறுவனங்களுக்கு காணி ஒப்படைக்கப்பட வேண்டும். | ஒப்படைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது |

## 3.11 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 96/05 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 6(11) ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகையாளர்கள் வரியைச் செலுத்த வேண்டிய காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், குத்தகையாளர்களில் 13 பேருக்கு அவ்வாறான ஞாபகமூட்டல் கடிதங்களை அனுப்பி வைப்பதற்கு தமன்கடுவை பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் குத்தகையாளர் களுக்கு அறிவித்தல்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகல மற்றும் ஹிங்குராங்கொட பிரதேச செயலாளர்கள் முறையான கணிப்பை மேற்கொண்டு நலன்பெறுநர்களைத் தெரிவு செய்யாது பாராளுமன்ற அங்கத்தவரால் பெயரிடப்பட்ட 136 பேருக்கு சீவனோபாய அபிவிருத்தியின் பொருட்டு ரூபா 2,199,356 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | நலன் பெறுநர்களைத் தெரிவு செய்யும் போத அது வெளிப்படையாக இருக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு நலன் பெறுநர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மெதிரிகிரிய பிரதேச செயலகம் “பெரகும்புர சீ.பீ.மாவத்தையின் முன்புறத்தே வீதியில் | கொடுப்பனவு சரிவரக் கணிப்பிட்டு மேற்கொள்ளப்பட | இழப்பை நிறுத்தி வைத்த பணத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கொங்கிரீட்டுக்கும்'' செயற்திட்டத்திற்குக் கொடுப்பனவு மேற்கொள்கையில் அதன் சுவர் (ஊயசடி றயடட) ஆழத்திற்கென 0.074 மீட்டருக்கு ரூபா 52,437 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மெதிரிகிரிய பிரதேச செயலகம் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 25.2 ஆம் இலக்க போகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் 21 ஆம் இலக்க வீட்டுக்கு எதிரே உள்ள அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் கொங்கிறீட்டுக்குப் பயன்படுத்திய கம்பி கழன்றிருந்தது. சில கம்பினகள் கொங்கிறீட் போடப்பட்டுள்ள பொலித்தீன் உறையின் கீழ் போடப்பட்டிருந்தன. மேலும், சில இடங்களில் கம்பனி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிலும் அமுலில் இருக்கும் பொருட்டு 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் அரசாங்க மனைகளுக்கான சிக்கன வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், அம்மதிப்பீட்டு வாடகையை அறவிடாது எலஹெர பிரதேச செயலகம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பழைய மதிப்பீட்டு வாடகையின் அடிப்படையில் அரசாங்க மனைகளுக்கான சிக்கன வாடகை அறவிடப்பட்டிருந்தது. குறைவாக அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 87,000 ஆகும். | தவறற்ற மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவையாகவுள்ள தண்டப்பணத்தை அறவிடுவதற்கும் குறித்த சிக்கன வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | வெலிகந்த கலாசார நிலையம் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் திறந்து வைக்கப்படாதிருந்தது. கட்டிடத்தைச் சூழவுள்ள வேலியை யானைகள் சேதப்படுத்தியிருந்தன. இதன் பொருட்டு ரூபா 97,749 | கூடுதலாக கொடுப்பனவு செய்த பணம் அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | வெலிகந்தை பிரதேச செயலகம் கிராம உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 266.15 மீட்டர் கிராமிய வீதியைத் தயாரிப்பதற்குகொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், நேரடிப் பரிசோதனையின்போது 258.1 மீட்டர் தயாரிக்கப்பட்டு ரூபா 114,442 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது புலனாகியது. | கூடுதலாக வழங்கப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | ஹிங்குராங்கொட பிரதேச செயலக கம்பெரலிய கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களது ரேட் கணிப்பிடப்படும்போது மாகாண கூறுவிலை புறக்கணிக்கப்பட்டு கூறுவிலை தீர்மானிக்கப்பட்டதால் ரூபா 2,646,747 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டைத் தயாரிக்கையில் மாகாண கூறுவிலை கருத்திற் கொள்ளப்பட வேண்டும். | அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.13 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தின் முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் 2 ஆம் கட்டத்தினது வேறுபாடுகளை அங்கீகரிப்பது 2019 டிசம்பர் 6 ஆந் திகதியளவிலும் நடைபெறாதிருந்த போதும், அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேறுபாடுகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | வேறுபாட்டை இனங்கண்டு பெறுமதியைக் கணிப்பதற்கு அதிக நாட்களாகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி 244 சுட்டுக்களையும் 169 இலக்குகளையும் 17 நோக்கங்களையும் கொண்டது. அந்த நோக்கங்களை அடைவதற்கு மாவட்டச் செயலகத்தால் குறித்த நோக்கெல்லையை நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்க முன்னேற்றத்தை அளவிடுவதற்கான சுட்டும் ஊக்கமும் உடைய தரப்பினர் இனங்காணப்படவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்க முன்னேற்றத்தை அளவிடுவதற்கான சுட்டினையும் தரப்பினரையும் இனங் கண்டிருக்கவில்லை. | பதில் பெறப்படவில்லை. |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களது சேவையை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஹிங்குராங்கொட மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களது 1146 தேசிய அடையாள அட்டை இல்லாதோர் இனங்காணப்பட்டிருந்தனர். எனினும், அந்நபர்களுக்கு விழிப்புணர்வூட்டி அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அடையாள அட்டைகள் இல்லாதோரை இனங்கண்டு அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகங்கள் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் வாக்களிப்பதற்கு உரித்துள்ளவர்களாக பதிவு செய்திருந்தும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத நபர்களின் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவையின் மூலம் விண்ணப்பங்களுக்கிடையே 2019 டிசம்பர் 31 ஆந் | தொடர் நடவடிக்கை மேற்கொண்டு துரிதமாக அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | திகதியளவில் 243 தேசிய அடையாள அட்டைகள் இல்லாமையால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (இ) | வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் நிதி போதுமானதாக அமையாததால் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வெலிகந்தை, திம்புலாகல, மெதிரிகிரிய பிரதேச செயலகங்களின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் சிறுநீரகப்படியும் வயது முதிர்ந்தோர் படியும் பெறத் தகுதிவாய்ந்த 1507 நபர்கள் எதிர்பார்ப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்தது. | அதிகமாக நிதி ஏற்பாட்டைப் பெற்று தகுதியான சகலருக்கும் நலன்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்தம் பெறும் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நலன் பெறுநர்களுக்கு மாத்திரமே நலன்கள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்பெறுநர்களுக்கு எஸ்பொஸ்டோஸ் தகடு மற்றும் சீமெந்து என்பன விநியோகிக்கப்படுகையில் ஏற்பட்டள்ள குறைபாடுகள் தொடர்பாக விரிவான பரிசீலனை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படும் என NCP/PL/DSPL/2019/A8/02 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினாவுக்கு வழங்கப்பட்ட பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அவ்வாறான உள்ளகக் கணக்காய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. | மாவட்டச் செயலாளரின் ஆலோசனையின் படி உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 06.'.2018 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் பிரதேச செயலக மட்டத்தில் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது குறைந்தளவு காலாண்டுக்கு ஒரு தடவையாவது கூட்டங்களை நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், வெலிக்கந்தை, தமன்கடுவ, மெதிரிகிரிய, லங்காபுர, திம்புலாகல பிரதேச செயலகங்கள் 2019 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டின் பொருட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தி இருக்கவில்லை. | சகல காலாண்டின் பொருட்டும் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | பதில் கிடைக்கப் பெறவில்லை. |

### 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட 01 ஆம் 02 ஆம் இணைப்புக்களில் உள்ள மாதிரிகளின் அடிப்படையில் எலஹெர, வெலிகந்தை, மெதிரிகிரிய, திம்புலாகல பிரதேச செயலகங்களால் செயலாற்றல் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவும் மனிதவள திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறே, சுற்றறிக்கைகளின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவளம், ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல், நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கிணங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மெதிரிகிரிய, வெலிகந்த பிரதேச செயலகங்களால் இது தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள துடன், திம்புலாகல பிரதேச செயலகத்திலிருந்து பதில் கிடைக்கப் பெறவுமில்லை. |